# முரசொலி

பக்கங்கள் நான்கு — விலை ரூபா 5.00

முரசு 06 ஒலி 59 பிரசோற்பத்தி தை 11 (25 01 1992) சனி


25·01·1992

## பிரதமரின் கண்டுபிடிப்பு

### வடக்கு கிழக்குப் பகுதியில் இனப்பிரச்சினை இல்லையாம்

வடக்குக் கிழக்குப் பகுதியில் இனப்பிரச்சினை ஏதும் நிலவவில்லை தீவிரவாதப் பிரச்சினையே நிலவுகிறது என்கிறார் பிரதமர் டி. பி. விஜேதுங்க நேற்று முன்தினம் அவசரகாலச் சட்ட நீடிப்பு விவாதத்தை முடித்து வைத்து பாராளுமன்றத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு —04ஆம் பக்கம் பார்க்க

# தமிழ்மக்கள் மனஉறுதிகண்டு நாம் ஆச்சரியம் அடைகிறோம்!

## 'கோமாரிக்' கப்பலில் 50 பைக்கட் சீமெந்தும்!

பருத்தித்துறை துறைமுகத்திற்கு 'கோமாரி' கப்பல் நேற்று காலை வந்து சேர்ந்தது.

இக்கப்பலில் அரிசி, சீனி பருப்பு, பால்மா வகைகள் மற்றும் செஞ்சிலுவைச் சங்கத்திற்கு, கெயர் நிறுவனத்திற்கும், பல்கலைக் கழகத்திற்கு எரிபொருளும் எடுத்து வரப்பட்டுள்ளது.

பருத்தித்துறை துறைமுகத்தின் திருத்த வேலைக்கு 50 பைக்கட் சீமெந்தும் எடுத்து வரப்பட்டுள்ளது. (08)25)

## அகதிகளுக்கு மருந்துவகை பிரிட்டன் நிதியுதவி

வடக்கு கிழக்குப் பகுதியிலுள்ள அகதி முகாம்களில் உள்ளவர்களுக்கு தேவைப்படும் அவசர மருந்து வகைகளைக் கொள்வனவு செய்ய பிரிட்டிஷ் அரசு நிதியுதவி வழங்கியுள்ளது

இந்த நிதியுதவி யூனிசேப் ஊடாகவே பிரிட்டிஷ் அரசினால் வழங்கப்படுகிறது 38 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதியுதவி மூலம் உடன் தேவைப்படும் மருந்து வகைகளைக் கொள்வனவு செய்யலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது

## எழுதுவினைஞர் பேரட்டிப்பரீட்சை வினாத்தாள்கள் வந்தன

அண்மையில் விண்ணப்பம் கோரப்பட்டிருந்த எழுதுவினைஞர் பதவிக்கான போட்டிப் பரீட்சைக்குரிய வினாத்தாள் பொதிகள் நேற்று யாழ் செயலகத்திற்கு வந்து சேர்ந்துள்ளன.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான வினாத்தாள்களும் இங்கு வந்து சேர்ந்துள்ளமையால் அவற்றினை உரிய இடங்களுக்கு அனுப்பி வைப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

யாழ் நகரத்தில் 16 பரீட்சை நிலையங்களில் எதிர்வரும் —04 ஆம் பக்கம் பார்க்க

## ஐ. நா. அபிவிருத்தித்திட்டம் ஸ்ரீலங்காவுக்கு நிதியுதவி

ஐ. நா அபிவிருத்தித் திட்டப் பிரிவு (U N D P) ஸ்ரீலங்கா அரசுக்கு ஐந்தாண்டு கால அபிவிருத்தித் திட்டப் பணிக்காக 5 கோடி 70 இலட்சம் ரூபாவை வழங்கவுள்ளது.

நியூயோர்க்கில் வெளியிடப்பட்ட யூ என். டி பி அறிக்கையில் இது குறிப்பிடப்பட்டுள்ளது வடக்கு கிழக்கில் போர் நடைபெற்றுவருகிறது நாட்டின் ஏனைய மூன்றில் இரண்டு பங்கு பகுதியில் அமைதி நிலவுகிறது இப்பகுதியில் அரசு அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட முடியும் — 04 ஆம் பக்கம் பார்க்க

## கடந்த 22 தினங்களில் 5பேர் சுருக்கிட்டு தற்கொலை

யாழ் குடாப்பகுதியில் கடந்த 22 நாள்களில் மட்டும் ஒரு இளம் குடும்பப் பெண், பல்கலைக்கழக மாணவன் உட்பட ஐந்து பேர் கழுத்தில் சுருக்கிட்டு தமது உயிர்களைப் போக்கிக்கொண்டனர்.

ஞாயிற்றுக்கிழமை ஒரு வயோதிபர் யாழ் நகர வீதியிலும். மனநோயினால் பீடிக்கப்பட்டிருந்த நான்கு பிள் —04 ஆம் பக்கம் பார்க்க

## நீண்ட இடைவெளியின் பின் இடமாற்றச் சபை நேற்றுக் கூடியது

யாழ் கல்வித் திணைக்களத்தின் இடமாற்றசபை நீண்டகால இடைவெளியின் பின்னர் நேற்றுக் கூடியது.

இதில் சகல கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களின் விருப்பத்திற்கு —04ஆம் பக்கம் பார்க்க

## தென்பகுதி கத்தோலிக்க தூதுக் குழு முரசொலிக்கு பேட்டி

(கப்டன் குணசிங்கம், கிறிஸ்ரி ரஞ்சன், ரவீந்திரன்)

★ நாம் இங்கிருந்து திரும்பியதும் இராணுவ நடவடிக்கையை ஒத்திவைக்கும் முயற்சியில் ஈடுபடுவோம்.
★ தெற்கு ஆயர்களையும் இங்கு அனுப்ப முயற்சிப்போம்.
★ ஜனாதிபதி மற்றும் சில அமைச்சர்களையும் உடனடியாகச் சந்திப்போம்
★ இங்கு நேரில் வந்த போதுதான் உண்மைகளை அறிகிறோம்.
★ இளைஞர்கள் போராட்டத்தில் விரும்பி இணைவதைஉணர்ந்தோம்

இவ்வாறு வடபகுதி வந்துள்ள கத்தோலிக்க துறவறச்சபை பிரதிநிதிகள் நேற்று அவர்களைச் சந்தித்த எமது செய்தியாளர்களிடம் தெரிவித்தனர்.

யாழ். வந்துள்ள கத்தோலிக்க துறவற சபைப் பிரதிநிதிகளுடனான சந்திப்பு நேற்று நண்பகல் யாழ். ஆயர் இல்லத்தில் நடைபெற்றது. இச்சந்திப்பில் அக்குழுவைச் சேர்ந்த பதினொரு பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். இவர்களில் இருவர் அருட் குருக்கள். ஒருவர் அருட்சகோதரர் எஞ்சியோர் அருட் சகோதரிகள்,

தங்கள் குழுவின் யாழ் விஜயம் பயனுள்ளதாக அமைய வேண்டுமென்பதே இப்பகுதி மக்களின் விருப்பம் இராணுவ நடவடிக்கைபற்றி அதிகமாகப்பேசப்படுகிற இவ் வேளையில் தங்கள் குழுவால் அதனை தடுத்து நிறுத்த முடியாவிட்டாலும், பேச்சுவார்த்தை தீர்வுக்கு ஒரு அவகாசம் வழங்கும் வகையிலாவது இராணுவ நடவடிக்கைகளை ஒத்திப்போட முயற்சியெடுப்பீர்களா என நமது செய்தியாளர் கேட்டபோது, அவர்கள் "வடபகுதியில் இராணுவதாக்குதல் தவிர்க்க — 04 ஆம்பக்கம் பார்க்க

## ஸ்ரீலங்கா மனித உரிமை மீறல் ஐ. நா. அறிக்கை வெளிவரும்

ஸ்ரீலங்காவில் மனித உரிமை மீறல் குறித்த ஐ நாவின் அறிக்கை அடுத்த மாதம் வெளிவரவுள்ளதாக பி.பி.ஸி. நேற்று அறிவித்தது.

இந்த அறிக்கை இன்னமும் பகிரங்கப்படுத்தப்படவில்லையாயினும் உலகில் காணாமற்போனோர் தொகைமிகமோசமாக அதிகரித்துவருவது ஸ்ரீலங்காவில் தான் என அந்த ஐ. நா அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

1983 இலிருந்து இதுவரை சுமார் பன்னிரண்டாயிரம் பேர் இவ்வாறு காணாமற் போயுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது,

அடுத்த மாதம் இந்த அறிக்கை அகதிகளுக்கான ஐ. நா அமைப்பிடம் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்படும் பிரிட்டனும், நெதர்லாந்தும் ஸ்ரீலங்காவிடம் மனித உரிமைகள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளும் எனவும் பி. பி ஸி தெரிவித்தது.

இதே கூட்டத்தில் இந்தி —04 ஆம் பக்கம் பார்க்க

## சம்பூரில் இராணுவத்தினரின் அட்டகாசம் அதிகரிக்கிறது

மூதூரில் இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு ஒன்றில் 6 தமிழ் மக்கள் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த 21 ஆம் திகதி சம்பூர் கிராமத்தை சுற்றி வளைத்த படையினர் இந்த ஆறுபேரினதும் கைகளை கட்டிய பின்னர் சுட்டுக்கொன்றனர். இவர்களில் ஒருவரின் சடலம் அடையாளம் தெரியாது உருக்குலைந்து காணப்பட்டது

கொல்லப்பட்டவர்கள் அனைவரும் இருபது வயதுக்கும் மூப்பது வயதுக்குமிடைப்பட்டவர்கள் படையினரின் தாக்குதலுக்குள்ளான வயோதியர் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

இதைத் தொடர்ந்து மறுநாள் மூதூர் இராணுவ முகாமிலிருந்துவந்த படையினர் பல கிராமங்களைச் சுற்றிவளைத்து 60 பேரை முகாமுக்கு இழுத்துச் சென்றனர்.

இதேசமயம் சம்பூரில் இரு இராணுவ முகாம்களும் 50 யார் இடைவெளியில் புதி —04 ஆம் பக்கம் பார்க்க

## தபால் பொதிகள் வந்தன

பருத்தித்துறைக்கு நேற்று வந்து சேர்ந்த 'கோமாரி' கப்பலில் யாழ் மாவட்டத்திற்கான தபால் பொதிகளும் எடுத்துவரப்பட்டுள்ளன.

இமமாவட்டத்திற்கு 408 தபால் பொதிகள் வந்து சேர்ந்துள்ளன. (08)

## இந்திய கடற்படையினர் மக்களைத் துன்புறுத்தல்

தமிழ் நாட்டில் உள்ள கோடிக்கரையில் முகாமிட்டுள்ள இந்தியக் கடற்படையினர் அப்பகுதி மக்களை துன்புறுத்துவதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் அடிக்கடி முகாமுக்கு வெளியே வந்து தமது அடாவடித்தனங்களில் ஈடுபடு —04ஆம் பக்கம் பார்க்க

# முன்னாள் சோவியத்குடியரசுகளுக்கு உதவ

# 47 நாடுகளின் பிரதிநிதிகள் இணக்கம்

முன்னாளைய சோவியத் குடியரசுகளுக்கு அவசரகால உதவிகளை வழங்க 47 நாடுகளின் பிரதிநிதிகள் இணங்கியுள்ளனர்.

சோவியத்துக்கு உதவி வழங்குவது பற்றிய இரண்டு நாள் சர்வதேச மாநாட்டுக்குப் பின்னர் வாஷிங்டனில் இதைத் தெரிவித்த அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் பேக்கர் ஒருங்கிணைந்த செயற் திட்டம் பற்றி இந்தக் கூட்டத்தில் ஒப்புக் கொள்ளப்பட்டதாகக் கூறினார்

அமெரிக்க விமானங்கள் விரைவிலேயே உதவிப் பொருள்களை ஏற்றிச்செல்லத் தொடங்கும் என்றும் இந்த உதவிப்பணி இரண்டு வாரங்களில் முடிவடையும் என்றும் அவர் கூறினார்.

தொடக்கத்தில் மூன்று கோடியே எண்பத்து நான்கு லட்சம் பவுண் மதிப்புள்ள உணவும் பொருள்கள் அனுப்பப்படும் என்றும் அவர் கூறினார்.

ரஷ்ய அதிபர் யெல்சின் மேலைநாடுகளின் உதவி நடவடிக்கைகளை வரவேற்றுப் பேசினார். அயல்நாட்டு முதலீடுகளுக்கு ஏற்ப சரியான சூழ்நிலைகளுக்குத் தமது நாடு உத்தரவாதம் அளிக்கும் என்று அவர்வாக்குறுதி அளித்தார்.

## பயிற்சியைமுடித்த124 ஆசிரியர்கள் பாடசாலைகளுக்கு நியமனம்!

கடந்த இரண்டு வருடங்களாக ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் பயிற்சி பெற்று வெளியேறிய 124 ஆசிரியர்கள் 01-01-92 முதல் வடமாகாணப் பாடசாலைகளுக்கு ஆசிரிய பணியினை மேற்கொள்ள யாழ் பிரதேசக் கல்விப் பணிப்பாளரினால் அனுப்பப்பட்டுள்ளனர்.

இவர்களில் பெரும்பாலானோர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்குச் செல்வதற்கு முன்னர் எப் பாடசாலைகளில் கற்பித்தனரோ அப் பாடசாலைகளுக்கே மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

விஞ்ஞானப் பயிற்சி நெறியில் 53 ஆசிரியர்களும், கணிதப்பயிற்சி நெறியில 26 ஆசிரியர்களும், சங்கீத பாட பயிற்சி நெறியில் 03 ஆசிரியர்களும், இந்துசமயப் பாடநெறியில் 02 ஆசிரியர்களும், கத்தோலிக்க சமய நெறியில் 19 ஆசிரியர்களும், மனையியலில் 01 வரும், நடனத்தில் 03 ஆசிரியர்களும், நுண்கலையில் 03 ஆசிரியர்களும், ஆங்கிலத்தில் 14 ஆசிரியர்களும் பயிற்சியை முடித்து வெளியேறியுள்ளனர். (15)

## பெண்குழந்தை

தமிழக சிறையில் தற்பொழுது தடுத்து வைக்கப்பட்டுள்ள நளினிக்கு பெண் குழந்தையொன்று பிறந்திருப்பதாக பி.ரி.ஐ. நிறுவனம் அறிவித்துள்ளது.

நளினி கடந்த வருடம் கைது செய்யப்பட்டிருந்தார்.

## இன்று பிரியாவிடை

மருதனார் மடம் கல்விக் கோட்டப்பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வு பெறும் எஸ். தனஞ்சயனுக்கு இன்று 25-ம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு இக்கோட்டத்தை சார்ந்த அதிபர்களும் ஆசிரியர்களும் பிரியாவிடை வைபவமொன்றை நடாத்துகின்றனர். மருதனார் மடம் கல்விக் கோட்ட அதிபர் சங்கத்தலைவர் செ. கேசவராஜன் தலைமையில் இவ்வைபவம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறுகின்றது. (37)

## உழவு பழக்கப்பட்ட மாடுகள் விற்பனைக்கு வருகின்றன!

முல்லை மாவட்டத் தமிழீழ ஆய்வு நிறுவனத்தால், கால்நடை வளர்ப்போரிடமிருந்து விலைக்கு வாங்கப்பட்டு உழவு பழக்கப்பட்ட பல நாம்பன் மாடுகள் எதிர் வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி சனிக்கிழமை காலை 8 மணி முதல் 10 மணிவரை இருவேலன் கண்டல் சந்தியில் ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

உழவு மாடுகளை வாங்க விரும்புவோர் அவற்றை ஏல விற்பனை நடைபெறும் தினத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்னரே பார்வையிடுவதற்கு ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படவுள்ளன.

அரசின் திட்டமிட்ட பொருளாதாரத் தடை மற்றும் எரிபொருள், உதிரிப்பாகத் தடையால் விவசாயச் செய்கை பாதிப்படைந்துள்ள வேளையில் இந்த உழவு மாடுகள் பழக்கும் திட்டம் விவசாயிகளுக்குப் பெரும் பயனைத் தரும் என எதிர் பார்க்கப்படுவதாக தமிழீழ ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

## யாழ். மாவட்ட ஆசிரியர்களிடையே கோட்ட ரீதியில் ஓவியப் போட்டி

யாழ். மாவட்டத்திலுள்ள ஆசிரியர்களிடையே கோட்ட ரீதியில் ஆக்க ஓவியப்போட்டியொன்றை நடாத்த யாழ் பிரதேச கல்வித் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இப்போட்டி 20/3/92-ல் அவ்வக் கோட்டங்களில் தெரிந்தெடுக்கப்பட்ட பாடசாலைகளில் நடைபெறவுள்ளது.

வேலணைக் கோட்டக் கல்வி ஆசிரியர்களுக் கிடையிலான போட்டி யாழ் வைத்தீஸ்வரா வித்தியாலயத்திலும், யாழ் கோட்டத்துக்கான போட்டி யாழ். இந்துக் கல்லூரியிலும், சாவகச்சேரி கோட்டத்துக்கான போட்டி சாவகச்சேரி மகளிர் கல்லூரியிலும், பருத்தித்துறை கோட்டத்துக்கான போட்டி வேலாயுதம் மகாவித்தியாலயத்திலும், மருதனாமடக் கோட்டத்துக்கான போட்டி இராமநாதன் கல்லூரியிலும், பண்டத்தரிப்பு கோட்டத்துக்கான போட்டி பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது.

குறிப்பிடப்படும் நேரத்தினுள் வழங்கப்படும் தொனிப்பொருள்கள் ஐந்தினுள் ஒன்றைப் பிரதிபலிக்கும் வண்ணம் ஆசிரியர்களால் ஓவியம் வரையப்படவேண்டும்.

ஓவியங்கள் யாவும் மாவட்ட நிலையில் கண்காட்சியில் வைக்கப்பட்டு சிறந்தவைக்கு யாழ் கல்வித் திணைக்களத்தினால் சான்றிதழ்கள் வழங்கப்படும். (15)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ்ப்பாணக் கிளை.

1992

வருடாந்தப் பொதுக் கூட்டத்துக்கான

அறிவித்தல்.

மேற்படி கிளையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் 29.03.1992 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு, யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

யாழ் கிளையின் ஒவ்வொரு பிரிவுகளிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட 30 அங்கத்துவப் பிரதிநிதிகள் (இப்பிரதிநிதிகள் வராதவிடத்து அவர்களுக்காக வருகை தரும் பிரதிநிதிகள்) மாத்திரமே இக்கூட்டத்தில் பங்கு பற்றலாம் இப் பிரதிநிதிகளின் பெயர்களைப் பிரிவுத் தலைவர்கள் 01.03.92க்கு முன்பாக எமக்கு அனுப்பி வைக்கவும்.

செயற்குழு உறுப்பினர் தெரிவுக்கான நியமனங்களும் தீர்மானங்களும் 07 03 92 முதல் 21.03 92 பிற்பகல் 4.00மணி வரை எமது பணிமனையில் ஏற்றுக் கொள்ளப்படும். (இதற்கான படிவங்கள் எமது பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்).

ச. சிவானந்தராசா
கௌரவ செயலாளர்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
23.01.92.

01070

## வானொலிப்பெட்டி கொண்டுவர அனுமதிப்பத்திரம் அவசியமாம்

வவுனியா இராணுவத்தடை முகாமூடாக வானொலிப் பெட்டி கொண்டு வருபவர்கள் அதற்கான வானொலி உத்தரவுப்பத்திரம் பெற்றிருக்க வேண்டும் என பணிக்கப்பட்டுள்ளது.

அவ்விதம் வானொலி உத்தரவுப்பத்திரமின்றி அதனைக் கொண்டு வருவதற்கு இராணுவம் அனுமதி மறுக்கின்றது.

இதனை அறியாது வானொலிப் பெட்டியினைக் கொண்டு வருபவர்களிடம் அவற்றினை இராணுவத்தினர் பறிமுதல் செய்து வருகின்றனர். (37)

## உணவுடன் வெள்ளைப்பூடா? - இல்லை வெள்ளை பூண்டுடன் உணவு

'ஆங்கிலத்தில் 'கார்லிக்' என்று அழைக்கப்படும் வெள்ளைப்பூண்டு (உள்ளி) மனித இனம் தோன்றியது முதலே உணவுக்கும், நோய்க்கும் மிக முக்கிய பொருளாக உலகின் பல பாகங்களிலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

நுண் புழுக்களைக் கொல்லும் 'அல்சின்' என்ற பொருள் இதில் இருப்பதால் வெள்ளைப் பூண்டை மருத்துவ முறைகள் அனைத்திலும் உலகம் முழுவதும் பயன்படுத்தி வருகிறார்கள்.

தினசரி உணவில் வெள்ளைப்பூண்டு இடம்பெற்றால் வயிற்றோடு சம்பந்தப்பட்ட பெரும்பாலான நோய்கள் விசேடமாய் வயிற்றுப் பொருமல் வாழ்நாளில் ஒருமுறை கூட வராது என்று பி.பி.சி. தமிழ் ஓசை நிகழ்ச்சியில் கடந்த மாதம் விவரித்திருந்தார்கள்.

சென்ற வாரம் இந்தியாவில் இருந்து நேயர் ஒருவர் பி பி சிக்கு எழுதிய கடிதத்தில் 'ஐயா! வெள்ளைப் பூண்டின் பெருமையை தங்கள் நிகழ்ச்சி வாயிலாக கேட்டறிந்த பின், நாங்கள் அன்றாடம் உண்ணும் உணவில் வெள்ளைப் பூண்டைச் சேர்ப்பதற்குப் பதிலாக வெள்ளைப் பூண்டில் உணவைச் சேர்த்து உண்கிறோம்' என்று எழுதியிருந்தார். (16)

## 14 அரச சார்பற்ற நிறுவனங்கள் யாழ். இணையத்தில அங்கம்

யாழ் மாவட்டத்தில்இயங்கி வரும் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் 14 வெகுஜன அமைப்புக்கள் அங்கம் வகிப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், சிறுவர் பாதுகாப்பு நிதியம், மறட்பானா, தமிழர் புனர்வாழ்வுக் கழகம், சர்வதேச கெயர் நிறுவனம், சர்வோதயம், அறவழிப் போராட்டக்குழு, அகதிகள் புனர்வாழ்வு நிதியம் 83, போரூட், இலங்கை செஞ்சிலுவைச்சங்கம், கிறிஸ்தவ வாலிபர் சங்கம், மெதடிஸ்த தேவாலயம், மனித முன்னேற்ற நடுநிலையம, தென்னிந்திய திருச்சபை ஆகியவற்றின் யாழ் கிளைகளே இணையத்தில் இணைந்து இயங்கி வருவதாக செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கிறது. (15)

## பாடசாலை சதுரங்கப் போட்டிக்கு விண்ணப்பம கோரப்படுகிறது

யாழ். கல்வித்திணைக்கள உடற்கல்விப் பிரிவினர் நடாத்தும் 1992-ம் ஆண்டுக்குரிய சதுரங்கச் சுற்றுப் போட்டிக்கான விண்ணப்பங்கள் பாடசாலைகள் ரீதியாக கோரப்பட்டுள்ளன.

மாணவர்களிடையே 15 வயதுக்குட்பட்டோர் 19 வயதுக்குட்பட்டோர் என இரு பிரிவாகவும் ஆசிரியர்களுக்கிடையேயும் இப்போட்டிகள் நடைபெறவுள்ளன. கோட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்படும். மூவர் மாவட்டமட்டப் போட்டியில் பங்கு கொள்வர். (37)

## காலக்கெடு இல்லையாம்

இந்தியாவில் தற்பொழுது அகதிகளாகத் தங்கியுள்ள அரச ஊழியர்கள் மீண்டும் தமது முன்னைய கடமைக்குத் திரும்புவதற்கு காலக்கெடு எதுவும் விதிக்கப்படவில்லையென ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்திருக்கிறார்.

தற்பொழுது இந்தியாவில் தங்கியிருக்கும் அரச ஊழியர்கள் இலங்கை திரும்பும்போது அவர்களுக்கு உறுதியாகத் தொழில் வழங்கப்படுமென வும் அவர் தெரிவித்துள்ளார்.

## வாலிபர் மர்ம மரணம் விசாரணையில் ராமராவ்

தெலுங்குதேசம் கட்சித் தலைவரும் முன்னாள் ஆந்திர முதலமைச்சருமான என்.டி. ராமராவ் சம்பந்தப்பட்ட விசாரணைக் கமிஷன் அறிக்கை ஒன்று பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

திரு. ராமராவை கொலை செய்ய முயன்றதாகக் கைது செய்யப்பட்டிருந்த மல்லால பாபஜி என்ற வாலிபர் தன் மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டதைத் தொடர்ந்து அவருக்கு மன்னிப்பு வழங்குவதாக பிரகடனம் செய்தார் அவர். ஆயினும் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட ஓராண்டு சிறைத்தண்டனையை அனுபவித்து விட்டு வந்த பாபஜி லொஜ் ஒன்றில் மின் விசிறியில் இரவுவேளை பிணமாகத் தொங்கக் காணப்பட்டார்.

இம்மரணம் தற்கொலை என்று முடிவு செய்து வழக்கை மூடைகட்டி வைத்தது பொலிஸ். திரு. ராமராவையும் விசாரணை செய்தது. 'பாப்ஜியின்மரணம்தற் கொலை அல்ல, கொலை தான்' என்று கமிஷன் தீர்மானித்துள்ளது.

திரு. ராமராவ் மீது நடத்தப்பட்டதாகக் கூறப்பட்ட தாக்குதலை திட்டமிட்டு அரங்கேற்றப்பட்ட வெறும் நாடகம், ஏற்பட்ட காயமும் வெறும் செட்டப்தான் என்று இவ்வறிக்கையில் தெரிக்கப்பட்டுள்ளதாக முதல்வர் ஜனார்த்தன ரெட்டி கூறியுள்ளார்.

## வண்டிச்சேவை

கொக்குவில் இந்து மயான அபிவிருத்திச்சபையினர் அந்தியகால வண்டிச் சேவையொன்றினை ஆரம்பித்துள்ளனர்.

சுமார் 32,000 ஆயிரம் ரூபா செலவில் இதற்கென புதிய வண்டியொன்று அமைக்கப்பட்டுள்ளதெனவும் இப்பகுதி மக்கள் இச் சேவையினை பெற்றுக்கொள்ள முடியுமெனவும் சபையின் செயலாளர் தெரிவித்தார். 37

## வாழ்வில் குறிக்கோள் அவசியம்

ஒவ்வொருவருக்கும் ஒரு குறிக்கோள் இருத்தல் வேண்டும். அதனை அடைய எடுக்கும் முயற்சியில் தான் அந்த மனிதன் இன்பத்தைக் காணமுடியும். வாழ்க்கையைப் பயனுள்ள வாழ்க்கையாகவும் அதுவே அமைக்கும். உயர்ந்த குறிக்கோளுடன் வாழ்கின்றவர்கள் தமக்கென முயலாது பிறர்பொருட்டு வாழ்கின்ற பெரியவர்கள் விரைவில் அடைந்துவிடக் கூடிய குறிக்கோளை வைத்துக் கொண்டு அதை அடைந்து விடுதல் சாதாரண மக்களின் வாழ்க்கை. பெரியவர்கள் எளிதில் அடையமுடியாத குறிக்கோளையே வைத்துக்கொள்வர். மிகச் சாதாரண குறிக்கோளை ஏற்று அதனை அடைந்து விடுவதைக் காட்டிலும் எளிதில் அடைய முடியாத குறிக்கோளை ஏற்றுக்கொண்டு அதை அடையச் செய்யும் முயற்சியே சிறந்தது என்பதே நம்மவர் கொள்கை.

அ ச ஞானசம்பந்தன்

## வடக்கில் பாரிய இராணுவ நடவடிக்கை

# தவிர்க்க முடியாதது

### கேணல் முனசிங்க கொழும்பில் அறிவிப்பு

யாழ் குடாவில் பாரியஇராணுவத்தாக்குதல் நடாத்தப்படுவது தவிர்க்க முடியாதது என இராணுவ பேச்சாளர் கேணல் சரத முனசிங்க தெரிவித்திருக்கிறார்.

கொழும்பில் பத்திரிகையாளர்களிடையே அவர் இப்படித் தெரிவித்திருக்கிறார்.

### முதலில் எங்கு தாக்குதல்?

ஆனால் எங்கு தாக்குதல் முதலில் தொடங்கும் என்பது பற்றி எதுவும் தெரிவிக்க முடியாது எனவும் கேணல் சரத் முனசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை கூட்டுப் படைத்தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்க நேற்று முன்தினம் திருமலை சென்றிருந்த போது 'யாழ்ப்பாணத்தில் தாக்குதலை ஆரம்பிக்கப் போகிறீர்களா?' என நிருபர் ஒருவர் கேட்டதற்கு 'அது பற்றி ஊகித்துக் கொள்வதை உங்கள் பொறுப்பில் விட்டுவிடுகிறேன்' என வனசிங்க பதிலளித்தார்.

### பிரசுரங்கள் போடப்பட்டதாம்

அத்துடன் மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயருமாறு வடபகுதிஎங்கும் விமானத்திலிருந்து பிரசுரங்கள் போடப்பட்டதாகவும் கூறினார் அவர்.

### மழைக்காலம் அகல்வதால்...

இது இவ்வாறிருக்க நேற்று முன்தினம் இரவு பாராளுமன்றத்தில் பிரதமரும் பாதுகாப்பு அமைச்சருமான டி. பி. விஜேதுங்க உரையாற்றுகையில் 'மழைக்காலம் அகன்று வருவதால் வடக்கில் இராணுவ நடவடிக்கை தீவிரப் படுத்தப் படவுள்ளது' எனக் கூறினார்.

## மந்திரிகளே பார்க்க முடியாது தெருவில் நிற்கையில் ...

'ஏம்ப்பா கண்டக்டர்! நான் ரெண்டு மாசமா பெங்களூர் போயிருந்தேன். அப்ப சாந்திக்கு ஒண்ணு பத்துதானே டிக்கெட் கொடுத்தே ... இப்ப என்ன ஒண்ணு ஐம்பது தர்றே?''

''ஆ ..ங்! போயி அந்த அம்மாட்டே (ஜெயலலிதாவிடம்) கேளு!''

''அந்த அம்மாவைத்தான் மந்திரிகளே பார்க்க முடியாது திண்டாடித் தெருவிலே நிக்கறாங்களே ... நான் வேற நிக்கணுமா?'

தமிழக அரசின் தற்போதைய நிலை பற்றியதாக சென்னை பஸ் ஒன்றில் பயணிக்கும் கண்டக்டருக்கும் இடையிலானதாக நிகழ்ந்த ஓர் வாக்குவாதமே இது.

தமிழக வார இதழ் ஒன்று இதனை 'டயலாக்' (உரையாடல்) என்ற பகுதியில் வெளியிட்டுள்ளது.

## தற்காலிக இடமாற்றமும் இடை நிறுத்தம்!

வடக்கிலிருந்து இடம் பெயர்ந்து செல்லும் ஆசிரியர்கள் தென் பகுதியில் உள்ள பாடசாலைகளில் கற்பிப்பதற்கு தற்காலிக இடமாற்றத்தினை வழங்கி வந்த கல்வி அமைச்சு தற்போது அதனை இடைநிறுத்தியுள்ளது.

இவ்வருட ஆரம்பத்திலிருந்து இவ்விதம் தென்பகுதி சென்ற ஆசிரியர்கள் அங்கு கடமையாற்ற கல்வி அமைச்சு அனுமதிக்கவில்லை.

க. பொ. த. சாதாரண தரப்பரீட்சை வினாத்தாள் திருத்தும் பணிக்கென சென்றவர்களில் சிலர் இவ்வாறான இடமாற்றத்தினைப் பெற முயற்சித்தும் முடியவில்லை.

அத்துடன் இங்கிருந்து இடம் பெயர்ந்து தெற்கில் கடமையாற்றும் தீவுப் பகுதி ஆசிரியர்களை பழைய இடங்களுக்கு திருப்பியனுப்புவது பற்றியும் ஆலோசிக்கப்படுவதாகத் தெரியவருகிறது. (37)

## பாடசாலைகளுக்கு இரவில் மின்வசதி வழங்க முயற்சி

மின்சாரம் இல்லாது மாணவர்கள் கல்வி பாதிப்படைவதால் அதனை ஓரளவு நிவர்த்தி செய்யும் பொருட்டு ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும், இரவுநேரங்களில் மாணவர்கள் கல்வி கற்பதற்காக ஜெனரேற்றர் மூலம் மின்சாரம் வழங்க யாழ். செஞ்சிலுவைச் சங்கம் தீர்மானித்துள்ளது.

இதனை பரீட்சார்த்த முறையில், நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க, யாழ்ப்பாணக் கிளை-கோப்பாய் பிரிவின் மேற்பார்வையில் இன்று முதல் தினமும் பிற்பகல் 6 30 மணி தொடக்கம் 9.30 மணிவரை முழுவல் நடத்தும்.

## ஜப்பானும் அமெரிக்காவும் பொருளாதாரப் போர்

அமெரிக்கா ஜப்பானின் குடியேற்ற நாடுபோல தனது மூலவளங்கள் மற்றும் உணவு. ரசாயனப் பொருள்கள் என்பவற்றை ஜப்பானுக்கு அனுப்பி வைக்கிறது.

அமெரிக்காவின் தாய் நாடு போன்று கார்களையும் மின் உபகரணங்களையும் ஜப்பான் அனுப்புகின்றது. இந்த நிலை மாறவேண்டும் என அமெரிக்கத் தொழில் அதிபர் சாடியுள்ளார்.

இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தகத்தில் 41 மில்லியன் டொலர் இடைவெளியுள்ளது. இது நிவர்த்தி செய்யப்படல் வேண்டும் எனக் கூறிய அவர் ஜனாதிபதி புஷ்ஷின் ஜப்பான் விஜயத்தைக் கண்டித்தார்.

ஜப்பானிலிருந்து பெருமளவில் கார்கள் இறக்குமதியாவதால் அமெரிக்கக் கார் உற்பத்தியைக் குறைக்க வேண்டியுள்ளதென்றும் கார் உற்பத்தித் தொழிற்சாலையில் வேலை செய்யும் 74000 பேர் வேலையின்றி இருப்பதாகவும் மேலும் அவர் குறிப்பிட்டார்.

## சிறுதானிய உற்பத்தியில் .ஈடுபடக் கோரிக்கை

யாழ். மாவட்டத்தில் பெரும்போக அறுவடை முடிவடைந்த பின் சிறுதானிய உற்பத்தியில் கடந்த வருடத்தைப்போன்று தாமதியாது ஈடுபடுமாறு யாழ் செயலகம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதுவரை காலமும் மேட்டு நிலங்களில் பயிரிடப்பட்டு வந்த பணப்பயிர்களுக்குப் பதிலாகக் குரக்கன், பயறு, கௌபி, கிழங்கு வகைகள் உற்பத்திக்கு முன்னுரிமை அளிக்கும்படியும் வவசாயிகளுக்குத் தேவையான தானிய வகைகள் குறைந்த விலையில் சகல கமநல சேவை நிலையங்களாலும், விவசாய உதவிப் பணிப்பாளராலும் விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் இது தொடர்பாக செயலகத்தினால் விடுக்கப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (04)

# யாழ். மாவட்டத்தில் 49408 பேர்

## தொடர்ந்தும் முகாம்களிலேயே வாழ்க்கை

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் தற்போது 256 அகதி முகாம்கள் இயங்கி வருகின்றன. இவ் அகதி முகாம்களில் 11118 குடும்பங்களைச் சேர்ந்த 49408 பேர் இடம் பெயர்ந்து தங்கி உள்ளதாகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. கடந்த மாதம் இவ் விவரம் எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண உ.அ.அ. பிரிவில் 06 அகதி முகாம்களில் 571 குடும்பங்களைச் சேர்ந்த 249 பேரும், நல்லூர் உ.அ.அ பிரிவில் 14 அகதிமுகாம்களில் 1735 குடும்பங்களைச் சேர்ந்த 7138 பேரும், கோப்பாய் உ.அ.அ பிரிவில் 24 அகதி முகாம்களில் 1174 குடும்பங்களைச் சேர்ந்த 5287 பேரும், சண்டிலிப்பாய் உ. அ அ. பிரிவில் 16 அகதி முகாம்களில் 744 குடும்பங்களைச் சேர்ந்த 3162 பேரும், உடுவில் அ. அ. பிரிவில் 21 அகதி முகாம்களில் 565 குடும்பங்களைச் சேர்ந்த 2758 பேரும், சங்கானை உ. அ.அ பிரிவில் 19 அகதி முகாம்களில் 1048 குடும்பங்களைச் சேர்ந்த 4550 பேரும், தெல்லிப்பளை உ. அ. அ. பிரிவில் 19 அகதி முகாம்களில் 1323 குடும்பங்களைச் சேர்ந்த 5404 பேரும், கரவெட்டி உ. அ. அ, பிரிவில் 04 முகாம்களில் 171 குடும்பங்களைச் சேர்ந்த 742 பேரும், சாவகச்சேரி உ. அ. அ, பிரிவில் 11 அகதிமுகாம்களில் 1072 குடும்பங்களைச்சேர்ந்த 5155 பேரும். பருத்தித்துறை உ.அ.அ. பிரிவில் 516 குடும்பங்களைச் சேர்ந்த 2102 பேரும், மருதங்கேணி உ அ அ. பிரிவில் 2023 குடும்பங்களைச் சேர்ந்த 10617 பேரும் தற்போது தங்கி உள்ளனர்.

இவ்வாறு இடம் பெயர்ந்து தங்கி உள்ளவர்களை அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், சிறுவர் பாதுகாப்பு நிதியம் (ஐ.இ) றெட்பானா, தமிழர் புனர்வாழ்வுக் கழகம், அறவழிப் போராட்டக்குழு, அகதிகள் புனர்வாழ்வு நிதியம் 83, போரூட், மெதடிஸ் தேவாலயம் ஆகிய நிறுவனங்கள் பராமரித்து வருகின்றன. (15)

## பாடசாலை உபகரணங்கள், பாதணிகள் மாணவர்களுக்குப் பகிர்ந்தளிப்பு

யாழ். மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்க சமாசத்தால் நியோகிக்கப்பட இருக்கும் அப்பியாசக் கொப்பிகள் ஏனைய பாடசாலை உபகரணங்கள், பாதணிகள் ஆகியயவற்றுக்கு விண்ணப்பித்த மாணவ முகவர்களும், அங்கத்துவ சங்கங்களும் எதிர்வரும் 27 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அவர்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட பொருள்களைக் காரியாலய நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதே போன்று சங்கங்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட ரயர், ரியூப், சங்கத் தேவைக்கான காகிதாதிகள் என்பவற்றையும் மேலே குறிப்பிட்ட திகதிக்குள் பெற்றுக் கொள்ளுமாறும் வேண்டப்படுகின்றனர். (04)

## சின்னகலை தோட்டக் கொள்ளை

### மட்டு.இளைஞர்கள் மீது சந்தேகமாம்

மலையகம் சின்னகலை தோட்டத்தில் இடம்பெற்ற இரட்டைக்கொலை, கொள்ளை தொடர்பாக மட்டக்களப்பைச் சேர்ந்த இருவர் தேடப்படுவதாகப் பொலிஸ் தலைமையலுவலகம் அறிவித்துள்ளது.

நாகேஷ், விஷ்ணு ஆகிய இருவரே தேடப்படுவதாக அறிவிக்கப்படுகின்றது.

கடந்த 10 ஆம் திகதி இத்தோட்டத்தில் 10 இலட்சம் ரூபா கொள்ளையிடப்பட்டிருந்தது தெரிந்ததே.

### பயிற்சிநெறி

பத்திரிகை எழுத்தாளர் பயிற்சி நெறி இன்று காலை பத்துமணிக்கு செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளை பணிமனையில் ஆரம்பமாகும்.

## வீணை மூலம் சிகிச்சை

வீணை வாத்தியத்தின் மூலம் போதை வஸ்துவுக்கு அடிமைமானவர்களை குணப்படுத்தலாம் என விஞ்ஞானிகள் ஒப்புகொண்டுள்ளனர்.

தற்போது இந்தியப் பிரபல வீணை வித்துவான் ஒருவர் அமெரிக்காவில் தனது வீணை இசையின் மூலம் போதைவஸ்துப் பாவனைக்கு அடிமையானவர்களை மெய்மறக்கச் செய்து குணமாக்கி வருகிறார். (22)

## செல்லச்சாமி சாடுகிறார்

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசையும் ஐக்கிய தேசியக் கட்சியையும் பிரிக்க சிலர் முயற்சியெடுப்பதாகக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் செல்லச்சாமி தெரிவித்துள்ளார்.

'தொண்டாவை வெளியேற்றுங்கள்' எனக் கோருவதன் மூலம் இதனைச் சாதிக்க சிலர் முயல்வதாகவும் அமைச்சர் செல்லச்சாமி தெரிவித்திருக்கிறார்.

## நியூசிலாந்து விஞ்ஞானி

# கண்டுபிடித்த புதுவித ரேடியோ

நியூசிலாந்தில் கிறைஸ்ட் சர்ச் நகரத்தைச் சேர்ந்த ஜிம் காயச் என்ற விஞ்ஞானி 'பீயரின்' சக்தியில் இயங்கும் ரேடியோவைக் கண்டுபிடித்திருக்கிறார்.

பீயரில் ஒருவித மின்சக்தி இருக்கிறது. அந்த மின்சக்தியின் வலுவே ரேடியோவை இயங்கவைக்கிறது என்றும் பாவிக்கும் பீயர் எவ்வளவுக்கு எவ்வளவு போதை மிக்கதாக உள்ளதோ அவ்வளவுக்கு சக்தி கொண்டதாக அந்த ரேடியோ இயங்கும் என்றும் ஜிம் கூறுகிறார்.

நியூசிலாந்திலும், அவுஸ்திரேலியாவிலும் இந்தக் குடிகார ரேடியோ அதிகமாக விற்பனை செய்யப்படுவதாகக் கூறப்படுகிறது. (16)

# காஷ்மீர் பொலிஸ் தலைமையகம் வெடிகுண்டினால் தகர்ப்பு

காஷ்மீர் மாநிலம் ஸ்ரீநகரில் நேற்று நண்பகல் மாநில பொலிஸ் தலைமை அலுவலகம் அருகே பெரும் குண்டு ஒன்று வெடித்ததில் அலுவலகம் சிதறியது.

நாளை நடைபெறவுள்ள இந்திய குடியரசு தினத்தின் போது எடுக்கவேண்டிய பாதுகாப்பு முறைகள் குறித்து பொலிஸ் உயரதிகாரிகள் மாநாடு ஒன்று நடத்திய போதே குண்டு வெடித்தது. இதில் ஒருவர் பலியானார் 5 சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் படுகாயமடைந்தனர்.

இந்நிலையில் பி.ஜே. பியின் ஒற்றுமையாத்திரை ஜம்மு சென்றடைந்துள்ளது இதனால் இம்மாநிலத்தில் மேலும் கிளர்ச்சியாளர்களின் தாக்குதல் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

இக்குண்டு வெடிப்பினையடுத்து உடனடியாக ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது ஸ்ரீநகர் ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன

# வானொலி ரூபவாஹினி மூலம் அரசு பொய்ப்பிரசாரம் - லலித்

வானொலி, ரூபவாஹினி மற்றும் சில பத்திரிகைகளை அரசு தனது சொந்த சொத்து என நினைத்து பொய்ப்பிரசாரம் செய்து மக்களை ஏமாற்றி வருகிறது.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலி கறுவனவலையில் நடைபெற்ற ஐ.தே.க. அதிருப்தியாளர் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்

தொடர்ந்து பேசிய லலித் ஏழு லட்சம் பேருக்கு அரசு தொழில் வழங்கியிருப்பதாக பிரதமர் கூறிவருகிறார் இது உண்மையானால் நாட்டில் ஏன் வேலையில்லாத்திண்டாட்டம் இன்னும் தலைதூக்கி யுள்ளது என்றும் அவர் வினாவினார். 08

## இனப்பிரச்சினை ஆலோசனைவழங்க

# செல்லச்சாமிக்கும் சைமனுக்கும் உரிமையுண்டு - பிரதி சபாநாயகர்

"இனப்பிரச்சினைத் தீர்வுக்கான ஆலோசனையை வழங்குவதற்கு அமைச்சர் தொண்டமானுக்கோ அன்டர்மானுக்கோ அல்லது செல்லச்சாமிக்கோ வீதியில் செல்லும் சைமனுக்கோ உரிமையுண்டு என பிரதிச்சபாநாயகர் காமினி பொன்சேகா தெரிவித்தார்.

அவசரகாலச்சட்ட நீடிப்பு விவாதத்தில் கலந்துகொண்டு பாராளுமன்றத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இப்படிக் குறிப்பிட்டார்.

முன்வைக்கப்படும் ஆலோசனையை பரிசீலிப்பதோ நிராகரிப்பதோ அரசின் வேலை எனக் குறிப்பிட்ட காமினி பொன்சேகா இவற்றை எதிர்த்து கோஷமிடுபவர்கள் மாற்றுயோசனையை சமர்ப்பிக்கலாமே எனக்கேள்வி எழுப்பினார்.

# மாவட்ட நீதிபதி, பதிவாளருக்கு அப்பீல் நீதிமன்றம் பிடியாணை

பொலனறுவ மாவட்ட நீதிபதியையும், பதிவாளரையும் அப்பீல் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கொழும்பு அப்பீல் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது

ஏற்கனவே அப்பீல் நீதிமன்றம் பிறப்பித்த தடை உத்தரவை அமுல் செய்ய மாவட்ட நீதிபதியும், பதிவாளரும் தவறியதற்காகவே இந்தப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு முதலில் அப்பீல் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அப்பீல் நீதிமன்றம் உத்தரவிட்டது. ஆனால் அதன்படி அவர்கள் ஆஜராகாததால் இந்தப்பிடியாணை பிறப்பிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு –

தெரிவித்தார்

தொடர்ந்து வன்செயல்களில் ஈடுபடுபவர்களை அழிக்க அரசு கடும் நடவடிக்கை எடுக்கும் எனவும் பிரதமர் எச்சரித்தார்.

புதிய பிரிவு

கணக்கியல்

திரு. S. K. பிரபாகரன்

A/L 93 செவ்வாய், வியாழன் 3-4

A/L 92 செவ்வாய், வியாழன் 4-5

யூனிவேர்சல்

கந்தர்மடம் - யாழ்ப்பாணம்

01060

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்கல்வியங்காடு டச்சுவீதி'லஷ்மிபில்டிங்'கில் உள்ள அச்சகத்தில் 25-01-1992 இல் அச்சிட்டுவெளியிடப்பெற்றது.

# கத்தோலிக்க பிரதிநிதிகள் யாழ். பிரஜைகள் குழு சந்திப்பு

யாழ்ப்பாணம் வந்துள்ள தென்பகுதி கத்தோலிக்க துறவற சபைப் பிரதிநிதிகள் நேற்று யாழ் பிரஜைகள் குழுப்பிரதிநிதிகளை யாழ் ஆயர் இல்லத்தில் சந்தித்து கருத்துப் பரிமாறிக் கொண்டனர்.

இச்சந்திப்பின் போது இங்குள்ள தற்போதைய நிலைமைகள் குறித்து பிரஜைகள் குழுவினர் தென்பகுதி பிரதிநிதிகளுக்கு விளக்கமளித்தனர்

தீவுப்பகுதிகளில் பொது மக்கள் உள்ளனர், அவர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கப்படுகிறது' என அரசு அடிக்கடி கூறிவருவதுபற்றியும் இச்சந்திப்பில் விளக்கமளிக்கப்பட்டது

தீவுப்பகுதி மக்களில் 95சதவீதமானோர் தற்பொழுது அங்கிருந்து இடம் பெயர்ந்து குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் அகதிகளாகத் தங்கியுள்ளதாக பிரஜைகள் குழுவினர் புள்ளிவிவரங்களுடன் எடுத்துக்காட்டி, அரசின் கூற்று தவறானது என்பதை நிரூபித்ததாகவும் அறியப்படுகின்றது. (04-16)

# போதைவஸ்து கடத்தல் வவுனியா இளைஞர் கைது

திருச்சியில் இருந்து விமான மூலம் நாடு திரும்பிய வவுனியாவைச் சேர்ந்த தமிழ் இளைஞர் ஒருவர் போதை வஸ்து கடத்திய குற்றச் சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டார்

இந்தியன் எயர்லைன்ஸ் விமான மூலம் வந்த இவரது பழக்கூடையில் இருந்து 350 கிராம் போதைப் பொருள் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது 08

இந்திய...

வதாகவும் புகாரிடப்பட்டுள்ளது

இதனையடுத்து அவர்களை முகாமை விட்டு வெளியேற வேண்டாம் என உத்தரவிடப்பட்டுள்ளது.

சம்பூரில்...

தாக அமைக்கப்பட்டுள்ளன, ஏற்கனவே இருந்த முகாம்களும் விஸ்தரிக்கப்படுகின்றன;

இப்பகுதியில் பல வீதித்தடைகளும் அமைக்கப்படுகின்றன. வாரந்தோறும் இப்பகுதிக்கு வரும் செஞ்சிலுவைச் சங்கத்தினரும் படையினரால் தடுக்கப்படுவதாகத் தெரியவருகிறது,

இதனால் சம்பூரில் நிகழும் சம்பவங்கள் வெளியே தெரிய முடியாத நிலை உருவாகியுள்ளது.

ஸ்ரீலங்கா

யாவிலிருந்து இலங்கை அகதிகள் பலவந்தமாக அனுப்பப்படுவது குறித்தும் கேள்வி எழுப்பப்படலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இடமாற்றச்...

இனங்கவே இடமாற்றங்கள் செய்யப்படுவதாகவும் இம்முறை 110பேர் இடமாற்றம் செய்யப்படவுள்ளதாகவும் இடமாற்றசபை ஒவ்வொரு மாதமும் கூடுவது என்வும் தீர்மானிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 04

கடந்த ..

னைக்குத் தந்தையான அரியாலை முள்ளிஒழுங்கையைச் சேர்ந்த பொன்னம்பலம் இரத்தினராசா 33) என்பவரும், 14ஆம் திகதி உடுவிலில் இளம் குடும்பப் பெண்ணும், சுன்னாகத்தில் ரயிலவே திணைக்களத்தில் கடமை புரிந்து வந்த 50 வயது நிரம்பிய உத்தியோகத்தர் ஒருவருமாக கடந்த 22 நாட்களுக்குள் 5 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர் 07

ஐ. நா...

எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ நா அபிவிருத்தித் திட்டம் வழங்கும் நிதியுதவி மூலம் வடக்கு கிழக்கு புனர்நிர்மாண புனரமைப்பு, ஏற்றுமதி, கைத்தொழில், கடற்தொழில், வறுமை ஒழிப்பு ஆகிய அபிவிருத்தித் திட்டங்களை ஸ்ரீலங்கா நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எழுது ..

15 ஆம் திகதி ஹோட்டிப் பரீட்சையை நடாத்துவதற்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு முன்பதாக விண்ணப்பதாரிகளுக்கான அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படும் எனவும் தெரிய வருகிறது. 04

தமிழ் ..

முடியாதென அரசு அறிவித்துள்ள இவ்வேளையில் அதனை ஒத்திவைக்கும் முயற்சியில் ஈடுபடுவோம்'' என்றனர்,

பத்திரிகையாளர்களின் சந்திப்பின்போது குழுவின் பிரதிநிதிகள் தெரிவித்த தகவல்களை இங்கு கேள்வி-பதில் வடிவில் தருகின்றோம்.

## இராணுவம் தடுத்தது

கேள்வி- அரசின் இராணுவ மற்றும் பொருளாதார தடைகளினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள யாழ் மாவட்டத்திற்கு கத்தோலிக்க மதகுருமார்களின் குழுவொன்று தற்பொழுது வந்துள்ளமை தாமதமான ஒரு நடவடிக்கையென்றே மக்கள் கருதுகின்றனர், இதுபற்றி தங்களின் பதில் என்ன?

பதில்- ஏற்கனவே இக்குழுவினர் இங்கு வரமுயன்றுள்ளனர். ஆனால் அவர்களுக்கு அதற்கான அனுமதி பெறுவதில் சிக்கல் இருந்தது தற்பொழுது இக்குழுவில் இங்கு வந்துள்ள பிரதிநிதிகளில் சிலர் ஏற்கனவே இங்கு வர முயன்றபோது வவுனியாவில இராணுவத்தினரால அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

## ஆயர்களும் இங்கு வருவர்

கேள்வி-தற்பொழுது இங்கு வந்துள்ள குழுவில துறவற சபைகளின் தலைவர்களான குருக்களும். கன்னியாஸ்திரிகளும மட்டுமே அடங்கியுள்ளனர் ஆயர்கள் எவரும் இடம்பெறவிலலையே?

நாம் கொழும்பு திரும்பியதும் ஆயர்களுக்கு இங்குள்ள நிலைமையை விளங்கப்படுத்தி அவர்களையும் இங்கு அனுப்ப முயற்சிப்போம்.

## ஆயர்களுக்கும் அக்கறையிலலை?

கேள்வி :- சிலாபத்தில் இரணவிலுவில் வோய்ஸ் ஒப் அமெரிக்கா நிலையம் நிறுவப்படுவதைத் தடுக்க ஆயர்கள் தலைமையில் எதிர்ப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால் அதனைவிட முக்கியமான தமிழர் பிரச்சினை குறித்து தென்பகுதி ஆயர்கள் சங்கம் மௌனமாக இருப்பதாக இங்குள்ள கத்தோலிக்கர்கள் கருதுவது பற்றி?

பதில்:- சிலாபம் பிரச்சினை அவர்களது பகுதியில் நடப்பதால் அவர்கள் அதில் அதிக அக்கறை காட்டியிருந்திருக்கலாம்.

## ஜனாதிபதியைச் சந்திப்போம்

கேள்வி:- நீங்கள் இங்கிருந்து திரும்பியதும் என்ன நடவடிக்கையை எடுக்கக்கூடியதாகவிருக்கும்?

பதில்:- ஜனாதிபதியையும் மற்றும் சில அமைச்சர்களையும் சந்தித்து யாழ்ப்பாண நிலைகுறித்து எடுத்துரைப்போம்.

## தெரிவுக்குழுவுக்கு ஆயர்கள யோசனை

கேள்வி:- ஆயர் மன்றம் இனப்பிரச்சினை குறித்து ஆக்கபூர்வமாக ஏதாவது இதுவரை எடுத்திருக்கிறதா?

பதில்:- இனப்பிரச்சினை தீர்வு தெரிவுக்குழுவுக்கு இலங்கை ஆயர் பேரவையால் தீர்வுக்கான யோசனைகள் ஒன்றுசமர்ப்பிக்கப்பட்டுள்ளது

## மக்கள மனம் தளரவில்லை

கேள்வி:- யாழ்ப்பாண விஜயத்தின் போது உங்களால முக்கியமாக அவதானிக்க முடிந்தவிடயம்?

பதில்:- இங்குள்ள மக்கள் எவ்வளவு சிரமங்களை அனுபவித்து வருகின்றமையை எங்களால் இந்த விஜயத்தின் போது நன்கு அவதானிக்க அறிய முடிந்தது இவ்வளவு கஷ்டங்களையும் அனுபவித்த போதிலும் அவர்கள மனம் தளரவில்லை- நம்பிக்கையை இழக்கவில்லை, இது தென்பகுதியினரான எமக்கு பெரும் ஆச்சரியமாக இருந்தது,

எங்களில் ஒருசிலர் 1986-ம் ஆண்டு இங்கு வந்திருக்கிறோம் அப்போது இங்கு இராணுவம் நிலைகொண்டிருந்தது இராணுவ கட்டுப்பாட்டிலிருந்த வேளை அவர்கள் பீதியுடன் இருந்தார்கள் ஆனால் இப்போது பீதியற்றவர்களாக, சுதந்திரமாக அவர்கள் உள்ளதை நாம் அவதானிக்க கூடியதாக இருந்தது,

## தெற்கில் தவறான தகவல்கள்

கேள்வி:- வடபகுதி நிலைபற்றி தெற்கில் வெகுஜன தொடர்பு சாதனங்கள் தவறான தகவல்களை தருகின்றனவே?

பதில்:- ஆம் இந்த விஜயத்தின் போது இதனை எம்மால் நன்கு புரிந்து கொள்ள முடிந்தது இங்கு விடுதலைப்புலியினர் சிறுவர்களை பலவந்தமாக ஆயுதப்பயிற்சிக்கு கொண்டு செல்வதாக அங்குள்ள தொடர்பு சாதனங்கள் தெரிவித்து வருகின்றன, ஆனால் இங்கு வந்ததின் பின்னர் அது முற்றிலும் தவறானது என்பதைப் புரிந்து கொண்டோம் இளைஞர்களும் சிறுவர்களும் விருப்பத்துடன் போராட்டத்தில் இணைந்து கொள்வதை எம்மால் புரிந்து கொள்ள முடிந்தது,

கேள்வி:- இங்கு யாரை எல்லாம் சந்தித்தீர்கள்?

பதில்:- விடுதலைப் புலிகள் இயக்க முக்கியஸ்தர்கள், பிரஜைகள்குழு உறுப்பினர்களை சந்திக்க முடிந்தது- பல விபரங்களையும் அறிய முடிந்தது

இக்குழுவிலுள்ள உறுப்பினர்களில் சிலர் வடக்கு- கிழக்குப் பகுதிகளில் சேவைபுரிந்து வரும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் தொடர்புடையவர்களெனவும் அங்கு தெரிவிக்கப்பட்டது.